அண்மையிலேகூட பல பேருக்கு பதவி உயர்வு பார்வை யற்றோரின் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் புதிய பணியிடங்களை ஏற்படுத்தி கல்வித் துறையின் மூலமாக கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குரிய வேலை வாய்ப்புகள் வரும்போது நிச்சயமாக சமூக நலத்துறை மன முவந்து உடனடியாக அந்த பணி இடங்களை ஊனமுற்ற வர்களைக் கொண்டு மட்டுமே நிரப்பும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 514, திரு. ஆர். சிங்காரம் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

514—

வனத்துறையில் சமூக வன ஊழியர்களையும், தோட்டக் காவலர்களையும் பணி நிரந்தரம் செய்தல்.

*14427— திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினா விற்கு விடையளிப்பாரா:

வனத்துறையில் வேலைவாய்ப்பு அலுவலக அனுமதி யின்றி பணியில் அமர்த்தப்பட்ட கிராம சமூக வன ஊழியர் களையும், தோட்டக் காவலர்களையும், நிரந்தரமாக்க அர சிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வனத்துறையில் வேலை வாய்ப்பு அலுவலக அனுமதி யின்றி பணியில் அமர்த்தப்பட்ட கிராம சமூக வன ஊழியர் களையும் தோட்டக் காவலர்களையும் நிரந்தரப் பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாடே போற்றி புகழும் தமிழக மக்களை காக்கும் காவல் தெய்வமாக விளங்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் வனத்துறையில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

1994 மே 4]

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகாறும் 380 நபர்களுக்கு நிரந்தர பணிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டும் காலியாக உள்ள இடங்களாக கருதப்பட்டு 250 பேருக்கு நிரந்தர பணியிடங்கள் வழங்கப்பட இருக்கின்றன. இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இந்த ஆண்டு புதிதாக அந்தப் பணிக்கு பெண்களையும் நியமிப்பதாக ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 515, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்

515—

எரிசக்தி மரம் பயிரிடும் திட்டம் மூலம் வேலைவாய்ப்பு வசதி

*16112— திரு. கா.பூ. முனுசாமி :

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எரிசக்தி மரம் பயிரிடும் திட்டத்தினைச் செயல்படுத்த எந்தெந்த மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன ?

(ஆ) கிராமப்புற மக்கள் இதன் மூலம் வேலை வாய்ப்பு பெற அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களைத் தவிர்த்து மற்ற அனைத்து மாவட்டங்களும் எரிசக்தி தேவையான மாவட்டங்கள் எனக் கருதி சிடா உதவியுடன் செயல்படுத்தப்படும், சமூக வனத் திட்டம் மற்றும் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஊரக விறகு மரத் திட்டம் வாயிலாக எரிசக்தி மரங்கள் வளர்க்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) இத்திட்டங்கள் வாயிலாக ஆண்டுதோறும் 91 லட்சம் மனித நாட்கள் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டு கிராமப்புற ஏழை மக்கள் பலன்பெற வகை செய்யப்பட்டுளது.